சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராமங்களைச் சேர்ந்த நன்செய் நிலங்களை சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டத்தில் நிரந்தரமாக சேர்த்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ப்பி 1) துறை

அரசாணை (நிலை) எண் 212 நாள் 16.09.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040
ஆவணி 31

மீண்டும் படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண் 1637, பொதுப்பணித்துறை, நாள் 18.8.1982.
2 அரசாணை (நிலை) எண் 2149, பொதுப்பணித்துறை, நாள் 1.10.1983.

மேலும் படிக்கப்பட்டது:

3 தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராம பொதுமக்கள் மனு நாள் 24.12.2001.
4 தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண் 47123/2004/ஜி2, நாள் 22.04.2005.
5 மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர், கடித எண் தொநுஅ2/உபொ3/1823/95, நாள் 06.02.2006.
6 சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண்.சி4/17560/06, நாள் 22.01.2007.

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம் தென்கரை கிராமத்தில் ரூ.791 இலட்சம் செலவினத்தில் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டத்தை செயல்படுத்த ஆணையிடப்பட்டு, அத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பாம்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டப்படும் வரை, மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் அணைக்கட்டுகளின்கீழ் ஏற்கனவே பாசனம் பெறும் ஆயக்கட்டுகளுக்கு சோத்துப்பாறை நீர்த்தேக்கத்தின் மூலம் பாசன வசதி உறுதிபடுத்தப்படுவதுடன், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 500 ஏக்கர் என்ற முறையில் புதிய ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

3. தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் வருவாய் கிராமங்களைச் சேர்ந்த வராகநதி பாசன ஆயக்கட்டுதாரர்களின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மனுவில், சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திட்டப் பாசன நீர் முறைப்படுத்துதல் விதிகளை நிர்ணயம் செய்யும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மேல்மங்கலம்,

ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராம நன்செய் நிலங்களுக்கு வராகநதி நீரை உறுதிப்படுத்துவதை, பாம்பாற்றின் குறுக்கே தடுப்பு அணை கட்டப்படும் வரை என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து, வராகநதியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள சோத்துப்பாறை நீர்த்தேக்கம் மூலம் பெறவுள்ள பாசன நீர், மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராம நன்செய் நிலங்களுக்கு நிரந்தரமாக, நிபந்தனையின்றி வழங்கப்பட வேண்டும் என்று மேற்கண்ட கிராம மக்கள் கோரியுள்ளனர்.

4. மேற்காணும் கோரிக்கை தொடர்பாக, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் அறிக்கைகளை பரிசீலனை செய்த பின்னர், சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம் மூலம் பெறும் பாசன நீரினை மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராமங்களில் உள்ள நன்செய் நிலங்களுக்கு நிபந்தனையின்றி வழங்கிட தக்க ஆணைகள் வழங்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், செய்துள்ள பரிந்துரையை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் உள்ள மேல்மங்கலம், ஜெயமங்கலம் மற்றும் குள்ளபுரம் கிராமங்களிலுள்ள நன்செய் நிலங்களுக்கு சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து பாசன நீரை, நிபந்தனையின்றி, வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

5. மேற்காணும் ஆணையானது வருவாய், வேளாண்மை மற்றும் நிதித் துறைகளின் இசைவினை முறையே அவற்றின் அலுவல் சார்பற்ற எண்.5694/LAI-(1)/2007-1, நாள் 13.2.2007, எண். 4637/AEI-2/2007-1, நாள் 22.2.2007 மற்றும் எண்.23627/பொ.ப.II/2007, நாள் 21.05.2007ல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை– 2.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை– 5
மாவட்ட ஆட்சியர், தேனி மாவட்டம், தேனி.
நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 5.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை– 5.
நகல்
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
வேளாண்மைத்துறை, சென்னை – 9.
வருவாய்த்துறை, சென்னை–9.
அனைத்துப் பாசனப் பிரிவுகள், பொதுப்பணித்துறை, சென்னை–9.
இ.கோ./உ.ந.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்